கோயில்களைப் புதுப்பிக்க மானியம்.

*49 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

1972-73-ம் ஆண்டில், இந்து அறநிலையப் பாதுகாப்புத்துறை மூலம் தமிழகத்திலுள்ள கோயில்களைப் புதுப்பிக்க மானியமாக வழங்கப்பட்ட தொகை எவ்வளவு, மாவட்டவாரியாக?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: 1972-73-ம் ஆண்டில் மாவட்டவாரியாக கோயில்களுக்கு அரசு அளித்த நிதி உதவியின் விபரம்:—

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	மானியத தொகை.
(1)	(2)
1 சென்னை	5,000
2 செங்கல்பட்டு	75,000
3 வட ஆற்காடு	65,000
4 தென்னாற்காடு	70,000
5 சேலம்	30,000
6 கோயம்புத்தூர்	60,000
7 தஞ்சாவூர்	90,000
8 திருச்சிராப்பள்ளி	30,000
9 ராமனாதபுரம்	30,000
10 திருநெல்வேலி	20,000
11 கன்னியாகுமரி	15,000
ஆக மொத்தம் ..	4,90,000

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்த மானியத் தொகை எந்த அடிப்படையிலே வழங்கப்படுகிறது என்பதையும், இதற்கு மத்திய அரசு மானியம் ஏதேனும் கொடுக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு எந்தவிதமான நிதியுதவியும் அளிப்பது இல்லை. கோயில்களின் நிதிவசதிகளைப் பொறுத்தும், திருப்பணிக் குழு வினர் வசூல் செய்கிற நிலைமையைப் பொறுத்தும், திருப்பணிக்குத் தேவையான நிதியின் அளவைப் பொறுத்தும் நிதிவசதிகளைப் பகிர்ந்தளிக்கிறோம்.

1973 ஆகஸ்ட் 6]

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்களில், வட ஆற்காடு மாவட்டத்திற்காக இதற்கு என்று குறைவான தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. மொத்தத் தொகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சரிசமமாகப் பங்கிட்டு அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் சமமான அளவிற்குக் கோயில்களின் எண்ணிக்கை இல்லை என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கு 90 ஆயிரம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே ராஜராஜேசுவரத்திற்கு ஏதாவது நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தனிக் கேள்வி போடவும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இதிலே சுமார் 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, பாடல்பெற்ற பல கோயில்கள் பாழடைந்த நிலையிலே இருக்கின்றனவே, அதற்காக சட்டசபை அங்கத்தினர்கள் கொண்ட ஒரு உயர் மட்டக் குழுவை நியமித்து எந்த எந்தக் கோயில்களை உடனடியாகச் செப்பனிட வேண்டும், நிவாரணம் கொடுக்க வேண்டுமென்ற முடிவுகளை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படி கோயில்களெல்லாம் அதிகமாகப் பழுதடைந்திருந்தால் 1967-க்கு முன்னால் 2 இலட்சம் ரூபாய் மட்டும் கொடுத்த உதவியை இன்றைய தினம் 6 இலட்சம் ரூபாயாக அதிகப்படுத்தியிருக்கிறோம்.

மலைக்கோட்டைக் கோயிலுக்கு மின்சார இழுவை ரயில்.

* 50 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :**
திரு. என். கிட்டப்பா :
திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மலைக்கோட்டை கோயிலுக்கு மின்சார இழுவை ரயில் துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.